விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 345 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 13 வியாழக்கிழமை (28.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தமிழர் தாயகத்தில் மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமான அஞ்சலி





- கண்ணீரில் நனைந்தது துயிலுமில்லங்கள்.
- உணர்வெழுச்சியுடன் பெருந்திரளானோர் பங்கேற்பு.
- வீரமறவர்களின் உன்னத தியாகத்துக்காக இயற்கையும் மண்டியிட்டது.
- அநுர அரசின் எவ்வித கெடுபிடிகளும் இல்லை.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளக்காடானது வடக்கு சுமார் ஒரு இலட்சம் பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பொழியும் அடைமழை காரணமாக 30 ஆயிரத்து 914 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 312 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.



இதற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 ஆயிரத்து 485 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 27 பேர் பாதிப்படைந்துள்ளனர். 29 இடைத் தங்கல் முகாம்களில் 571 குடும்பங்களைச் 15

## முதல் மாவீரர் சங்கர் இல்லத்தில் நினைவேந்தல்



15

## பாம்பு கடித்ததில் இளைஞன் மரணம்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா வடக்கு- நெடுங்கேணிப் பகுதியில்பாம்பு கடித்து இளைஞன் ஒருவர் மரணம் அடைந்துள்ளார்.

இந்தச் சம்பவமானது நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், குறித்த பகுதியில் 15

## நினைவேந்தலுக்குச் சென்றவர் வீதி விபத்தில் உயிரிழப்பு

### கொடிகாமத்தில் சம்பவம்

(சாவகச்சேரி)

நினைவேந்தலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடிப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்றுப் புதன் கிழமை மதியம் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் நினைவேந்தல் நிகழ்வொன்றிற்கு மோட்டார் சைக்கிளில் செல்லும் போதே கனரக வாகனம் ஒன்றுடன்மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப் 15

## சீரற்ற வானிலை 4 பேர் பலி

### 6 பேர் மாயம் 2,30,743 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற வானிலையால் இதுவரை 4 பேர் உயிரிழந்ததாகவும் 6 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித் 15

அதிகமதிகமாக சுப பலன்களைத் தரும் பலமிகு
ஹந்தஹன
Handahana ராசி சுப பலன்




அதிர்ஷ்டமிக்க மில்லியன் வெற்றியாளர்கள்
NLB தேசிய லொத்தர்
NLB ஹந்தஹன பொருத்தி உங்களது மில்லியன் பரிசுக் கனவை நனவாக்கிடுங்கள்
(C-2497)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். நோக்கி பயணித்த தனியார் பேருந்து விபத்து

## பெண் பலி; நால்வர் படுகாயம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று மதவாச்சிப் பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், நால்வர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் அடை மழையின் போது பேருந்து வேகமாக வந்ததால் வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்த பெண்ணும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே விபத்தில் உயிரிழந்தார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# அதிகூடிய மழை வீழ்ச்சி யாழ்ப்பாணத்தில் பதிவு

(யாழ்ப்பாணம்)

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதன்படி, அங்கு 253 மில்லிமீற்றராக பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் முல்லைத்தீவு, துணுக்காய் பகுதியில் 253 மி.மீ. மழை வீழ்ச்சியும், அச்சுவேலி பகுதியில் 245.3 மி.மீ மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (ம-7)

லங்கா மஹ்ரால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(579)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# அத்தியாவசிய சிகிச்சைக்காக மாத்திரம் யாழ். போதனாவுக்கு வாருங்கள்

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய சிகிச்சை தேவைப்பாடுகள் மாத்திரம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தருமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

இது குறித்து வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிவிப்பில் வெள்ளப்பெருக்கம் காரணமாக வைத்தியசாலையின் சில விடுதிப் பகுதிகளில் நீர் புகுந்துள்ளது.

மேலும், பல ஊழியர்களின் வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், அவர்கள் வேலைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால், சாதாரண வைத்திய சேவைகளை வழங்குவதில் சிக்கல்கள் இருக்கக் கூடும்.

எனவே, பொதுமக்கள் கிளினிக் போன்ற சாதாரண சிகிச்சைகளுக்காக வருகை தராமல், வெள்ளப்பெருக்கு குறைந்த பிறகு அவற்றுக்கான மருந்துகளை பெற்றுக் கொள்ளலாம் என்பதையும்,

அத்தியாவசிய சிகிச்சைகளுக்காக மட்டுமே வருகை தருமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது. (ம-7)

## யாழ். போதனா வைத்தியசாலையில் வெள்ளம்





# 8ம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **கிட்டிணன் பொன்னையா**

தோற்றம் : 19.01.1937 மறைவு 26.11.2016

(திதி : கார்த்திகை அபரபக்க திரயோதசி)

ஆண்டு எட்டென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
இன்றுவரை உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றன.

உண்மைதானா இதுவென்று-எம்
உள்ளுணர்வு மறுக்கின்றது
அன்பு கொண்ட உம் வதனம்-என்றும்
எம்மோடு இருப்பது போல் உணர்கின்றோம்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்

கூவில்,
புலோலி தென்மேற்கு,
புலோலி.

குடும்பத்தினர்

(C-1667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் தத்தளிக்கும் இலங்கை



நல்லூர்







நல்லூர்





வவுனியா







அம்பாறை




நல்லூர்



வட்டுவாகல்



சித்தாண்டி பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியேற்பு விழாவை நடத்தாமல் 200 மில்லியன் சேமித்த அரசு



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சத்தியப் பிரமாணத்திற்கு பயன்படுத்தப்படாத 200 மில்லியன் ரூபாய் பணம் மக்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வள பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்ட போது சுமார் 200 மில்லியன் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தமது அரசாங்கத்தின் அமைச்சர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தும் இனி மக்களின் கணக்கில் வரவு வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# ஜனாதிபதியின் கீழ் 94 அரச நிறுவனங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கீழ் உள்ள 3 அமைச்சுக்கள் தொடர்பான வர்த்தமானிகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், 94 நிறுவனங்களின் பொறுப்பு ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த 94 நிறுவனங்களும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழும் பாதுகாப்பு அமைச்சின் கீழும் பிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, மாகம்புர துறைமுக முகாமைத்துவ நிறுவனம், இலங்கை மற்றும் மிஹின் லங்கா நிறுவனங்கள், இலங்கை முதலீட்டுச் சபை, அத்துடன் ஊழியர்களின் நம்பிக்கை நிதிய கலால் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம், மத்திய வங்கி, ஹோட்டல் திட்டங்கள், அபிவிருத்தி லொத்தர் சபை, உள்நாட்டு இறைவரி திணைக்களம் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமை அலுவலகம், ஆயுதப் படைகள், அரச புனாய்வு சேவை மற்றும் சிவில் பாதுகாப்புத் துறை ஆகியவை உள்ளன.

மேலும், டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் கீழ் இலங்கை டெலிகொம் கட்டுப்பாட்டு நிறுவனங்கள், கனனி அவசர பதில் பிரிவு, தரவு பாதுகாப்பு அதிகாரசபை, ஆட்கள் பதிவு திணைக்களம், தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணைக்குழு உள்ளிட்ட ஏழு நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (நி-8)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் பாலர் பகல் விடுதியின் வளர்ச்சிக்காக பக்கபலமாக இருந்து செயற்பட்டு வரும் திருமதி. சி.சிவசக்தி அவர்களின் அன்புக் கணவர்

அமரர்.

**சோமசுந்தரம் சிவராஜசிங்கம்**



அவர்கள் 22.11.2024 அன்று லண்டனில் இறைவடி சேர்ந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்புடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... நிர்வாகத்தினர், பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும், நீர்வேலி.

(c-1665)

# பாராளுமன்றத்தை வலுப்படுத்துவது சபாநாயகரின் கரங்களிலுள்ளது

## பேராயர் மல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

புதிய சபாநாயகர் பாராளுமன்றத்தை வலுப்படுத்த வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

புதிய சபாநாயகரை சந்தித்த வேளை அவர் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்.

பலவீனமான நிலையில் பாராளுமன்றத்திற்கு புத்துயிர் அளிக்கும் பணி சபாநாயகர் அசோக ரண்வலவின் கரங்களில் உள்ளது என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். (நி-8)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
25 கார்த்திகை 2024
"பெண்கள் மற்றும் சிறுவர்களின் குரல் சத்தமாக ஒலிக்கப்படவும் அவர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் ஆவன செய்வோம்"
JSAC 16 2024
(சி-1664) யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# இராசிபலன்

28.11.2024 கார்த்திகை 13, வியாழக்கிழமை துவாதசி காலை 7.17மணிவரை
சித்திரை முற்பகல் 8.56 மணிவரை சுபநேரம் 7.43-9.13 மணிவரை இராகுகாலம் -1.43-3.13 மணிவரை
பிரதோச விரதம் சந்திராஷ்டமம் - உத்திரட்டாதி

வளவன்




நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, கௌரவமான நாள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.




உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், திட்டமிடப்படாத காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.




சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.




செய் தொழில் மேன்மையுண்டு, உறவு பகை பாராமல் உதவும் நாள் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்கவில் தாராளம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்




குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், சுப முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வார்த்தைகளில் நிதானம் தேவை.




மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப செய்திகள் வந்து சேரலாம்.




காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

நண்பன் உண்மையானவனாயின் உன்னை எச்சரிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நாளை மறுதினம் 30.11.2024 அன்று காலை 9.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் மணல், சவள், மண்வெட்டி, கோடாரி என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# தென்மராட்சி பகுதிகளில் வெள்ள அனர்த்தம்

## பல குடும்பங்கள் பாதிப்பு

(சாவகச்சேரி)

தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக தென்மராட்சியின் கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, இராமாயணம், கொடிகாமம், கெற்பேலி பகுதிகளைச் சேர்ந்த பல குடும்பங்கள் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

அதேவேளை தென்மராட்சியின் முக்கியமான வீதிகளை மூடி வெள்ளம் நிறைந்திருப்பதால் மக்கள் போக்குவரத்துச் செய்ய மாற்று வழிகளை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்ட மக்கள் பாதுகாப்பாக பாடசாலைகள், பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதுடன் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச இளைஞர்கள் இணைந்து அவர்களுக்கான சமைத்த உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினுடைய பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மதுவன் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பொதுக்கூட்டத்திற்கு சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. (6-8-30)

# மீட்பு நடவடிக்கையில் பொலிஸார், இராணுவத்தினர்



(நெளுக்குளம்)

வசந்தபுரம் தாழ்வு நில பகுதியில் வெள்ளநீர் வீட்டுக்குள் புகுந்த நிலையில் விரைந்து சென்று மீட்பு பணியில் இராணுவத்தினர், பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று பெய்த கனமழையால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வசந்தபுரம் கிராமத்தின் தாழ்வு நில பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது.

அதனையடுத்து கேப்பாப்பிலவு இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஜெனரல் கெட்டியாராய்ச்சி தலைமையிலான இராணுவத்தினர் , பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மீட்கப்பட்ட மக்கள் தற்போது கரிவேலன்கண்டல் பாடசாலை இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# வாகனம் மீது முறிந்து விழுந்த தென்னை மரம்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளைக்குச் சொந்தமான வாகனம் மீது தென்னை மரம் முறிந்து விழுந்ததால் வாகனமும் தரிப்பிடமும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

நெடுந்தீவு கிழக்கு 13 ஆம் வட்டாரத்தில் செஞ்சிலுவைச் சங்க கிளைத் தலைவரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மீது நேற்றுக் காலை ஏற்பட்ட கடும் காற்றினால் தென்னை மரம் முறிந்து விழுந்தமையால் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (6-8)

# சீரற்ற காலநிலையால் நெடுந்தீவிலும் இயல்பு நிலை பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் அப்பகுதிகளை நெடுந்தீவு பிரதேச செயலர் நிவேதிகா கேதீசன் தலைமையிலான குழு நேற்று நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

நெடுந்தீவு பிரதேசத்தில் கடும் மழையால் செபநாயகபுரம் பகுதியிலுள்ள வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் அப்பகுதி மக்கள் தற்காலிக தங்குமிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க.த.க வித்தியாலயத்தில் தற்போது 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளநீர் அதிகமாகத் திரண்டு காணப்படும் இடங்களில் இருந்து அதை அப்புறப்படுத்துவதற்காக வாய்க்கால்கள் வெட்டி நீர்தேக்கத்தை நீக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (6-8)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:39 3/4<br>8 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L, Manager (pvt)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/14940 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: Management Degree<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14981 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Business (London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14942 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 25 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Bsc, Software Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/14983 |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>8 இல் செவ்<br>கி.பா:80<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Bsc(IT), Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியானபெண்<br>தொ.இ: B/14945 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>8 இல் சூரி செவ்<br>கி.பா:71<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BA, Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர், தகுதியான ஆண்<br>தொ.இ: G/14985 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான வளர்ச்சிப் பாதையில் இலங்கை பொருளாதாரம்

## ஐ.எம்.எப் பணிப்பாளர் பாராட்டு



(கொழும்பு)

இலங்கை அதிகாரிகள் தங்களது சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் நிலைத்து நின்று பொருளாதாரத்தை நிலையான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஷ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகள் சர்வதேச நாணய நிதியத்தினால் ஆதரிக்கப்படும் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றனர்.

கடன் நிலைத்தன்மை மற்றும் வெளிப்புற நம்பகத்தன்மை என்பவற்றை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

பொருளாதார மீட்சி, பணவீக்கம் குறைவடைந்துள்ளமை மற்றும் கையிருப்பு அதிகரித்துள்ளமை என்பன இந்த திட்டத்தின் சிறந்த தொடக்கமாக உள்ளன.

இதன்படி, மூன்றாவது மீளாய்வுக்குப் பின்னர் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர்கள் மட்ட உடன்பாட்டை எட்டியுள்ளது.

அதேநேரம் மீதமுள்ள ஏனைய கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை இலங்கை அதிகாரிகள் தொடர்ந்தும் நிறைவு செய்து வருகின்றனர்.

இந்த கூட்டு முயற்சியானது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் வெற்றிக்கு ஆதரவளிக்கும் எனச் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஷ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார். (நி-8)

# மணிவிழா வாழ்த்து

திரு. இராமு ஆறுமுகம் ஸ்ரீதரன்

(SLTS-I (Trained)

விவசாய ஆசிரியர் - யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

சேவைக்காலம் - 36 வருடங்கள்

சேவை விபரம்

- யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் (17.08.1988-05.02.1991)
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சி கல்லூரி (06.02.1991-28.02.1993)
- யா/புங்குடுதீவு சண்முகநாத வித்தியாலயம் (01.03.1993-31.12.1994)
- யா/மத்துவில் றோ.க.த.க வித்தியாலயம் (01.01.1995-31.01.1997)
- யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (01.02.1997-25.10.1998)
- யா/புனித மரியாள் வித்தியாலயம் (26.10.1998-08.05.2005)
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (09.05.2005 - 05.01.2016)
- யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் (06.01.2016-06.02.2020)
- யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் பகுதிநேரம் (10.01.2017-27.11.2024)




எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக சேவையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியரை வாழ்த்தி அவரது ஓய்வு காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(2616)

வாழ்த்துவோர்:- பாடசாலை சமூகம்

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.

# மணிவிழா வாழ்த்துகள்

திரு

இராமு ஆறுமுகம் ஸ்ரீதரன்

சேவைக்காலம் - 36 வருடங்கள்

(1988-2024)

SLTS-I (Trained)

எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி 28.11.2024 இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.இராமு ஆறுமுகம் ஸ்ரீதரன் அவர்களை ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம். (2619)



ஆசிரியர் நலன்புரிக் கழகம்

யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 01. கார்த்திகேசு வீதி. 70/9 (74/9 பழையது) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வீரபாகு இராசம்மா. செல்லையா சுந்தரம் என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை மீசாலை தெற்கைச் சேர்ந்த வீரபாகு கைம்பெண் இராசம்மாவும் வீரபாகு கணேசமூர்த்தி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு வே.கனகசபை அவர்கள் மூலம் 17850 இலக்க 25.10.1966ஆம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதியில் இவ்வாதனம் எங்களில் 1ஆம் பெயர்வழிகாரிக்கு மகன் முறையும் 2ஆம் பெயர்வழிகாரனுக்கு சகோதரன் முறையுமான அவ்வூர் செல்லப்பா மயில்வாகனத்துக்கு அழிக்கப்படாத நன்கொடையாக வழங்கியுள்ளனர்

பின்னர் மீசாலை தெற்கு செல்லப்பா மயில்வாகனமும் பெண் இளையபிள்ளையும் அவருடைய மகள் அவ்வூர் சுந்தரம் பெண் பொன்னம்மாவுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 30.03.1975 ஆம் திகதியில் நிறைவேற்றிய 1544 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளனர்.

மேலும் மீசாலை தெற்கு இளையதம்பி இராசையாவும் பெண் நாகேஸ்வரியும் அவ்வூர் செல்லையா சுந்தரம் பெண் பொன்னம்மாவுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 05.04.1978 ஆம் திகதியில் நிறைவேற்றிய 2446 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளனர்.

பின்னர் மீசாலை தெற்கு செல்லையா சுந்தரம் பெண் பொன்னம்மா பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 01.07.1985 ஆம் திகதியில் நிறைவேற்றிய 5031 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கட்டுவன் தெல்லிப்பளை சின்னத்தம்பி துரைராசாவுக்கு இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் தெல்லிப்பளை கட்டுவன் சின்னத்தம்பி துரைராசா மீசாலை தெற்கு சின்னத்தம்பி சற்குணநாதனுக்கு பிரசித்த நொத்தாரிசு சி.சுரேந்திரன் அவர்கள் மூலம் 11.08.1986 ஆம் திகதியில் நிறைவேற்றிய 3565 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் மீசாலை தெற்கு சின்னத்தம்பி சற்குணநாதன் பெண் இரத்தினபூபதி அவ்வூர் செல்லையா சுந்தரம் மகன் உதயசந்திரனுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 11.07.1993 ஆம் திகதியில் நிறைவேற்றிய 7530 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் மீசாலை மேற்கு தற்காலம் பன்சல வீதி. ஹற்றனைச் சேர்ந்த சுந்தரம் உதயச்சந்திரனால் மீசாலை மேற்கு முருகேசு புண்ணியமூர்த்தி பெண் யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு ப.குகனேஸ்வரன் அவர்கள் மூலம் 14.09.2020 ஆம் திகதியில் நிறைவேற்றிய 4180 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

வேறொரு ஆதனம் மீசாலை வடக்கு சிவசம்பு கணேசன் என்பவரால் மீசாலை தெற்கு முருகேசு புண்ணியமூர்த்தி மனைவி யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 27.01.1975 ம் திகதியில் நிறைவேற்றிய 1495 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் உருத்திரபுரம் சிவநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த கணேசலிங்கம் கைம்பெண் தங்கமுத்துவால் மீசாலை மேற்கு முருகேசு புண்ணியமூர்த்தி பெண் யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு ப.குகனேஸ்வரன் அவர்கள் மூலம் 31.01.2021 ஆம் திகதியில் நிறைவேற்றிய 4238 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் பாதை உரித்து வந்தடைந்துள்ளது.

பின்னர் மீசாலை மேற்கு. கார்த்திகேசு வீதி முருகேசு புண்ணியமூர்த்தியும் பெண் யோகாம்பிகையும் பிரசித்த நொத்தாரிஸ் செல்வி சின்னத்துரை சிவவாணி அவர்கள் மூலம் 20.08.2023 ஆம் திகதியில் 1563 ஆம் இலக்க பாதை உரித்து பிரகடன உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் மீசாலை மேற்கு தற்போது பன்சல வீதி. ஹட்டன் சுந்தரம் உதயச்சந்திரனால் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜ் ஆர்த்திகா அவர்கள் மூலம் 21.08.2023 ஆம் திகதிய 347 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் கிணற்றடி வளவு நி.ப 8 குளி 1 1/2யில் சொரியலான 1/4 பங்கிற்கு அதாவது மேற்குறித்த 7988/s ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 00.49 விஸ்தீரணமுடைய ஆதனத்திற்கு முறையான உறுதி ஏதும் இல்லாத காரணத்தினால் இவ் வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றி உள்ளார்.

பின்னர் பன்சல வீதி. ஹட்டன் தற்போது மீசாலை மேற்கு சுந்தரம் உதயச்சந்திரன் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜ் ஆர்த்திகா அவர்கள் மூலம் 15.06.2023 ஆம் திகதியில் நிறைவேற்றிய 388 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு வீதி. மீசாலை மேற்கைச் சேர்ந்த முருகேசு புண்ணியமூர்த்திக்கு வழங்கியுள்ளார்

01). வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மீசாலை இறை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட J/319 இலக்க கிராம அலுவலர் பிரிவு "கிணற்றடி வளவு" நிலப்பரப்பு 18 மேற்குப் பக்க அரைவாசிக்கு 9 இது ஆட்சிப்படி நிலப்பரப்பு 8 குளி 1 1/2 எட்டு பரப்பும் ஒன்றரை குளியும் இதில் 3/4 பங்குக்கு வடக்கு பக்கமாக நிந்தமான நிலபரப்பு 6 குளி 0.37 ஆறு பரப்பும் 0.37 குளியும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் அளந்து வரையப்பட்ட 23.08.2020ஆம் திகதிய 7988/S இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 09 குளி 07. இதற்கெல்லை கிழக்கு கார்த்திகேசு நடராசலிங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு இக்கொள்வனவுகாரருக்குரிய ஆதனம். மேற்கு சின்னையா நல்லையாவுக்குரிய ஆதனம். தெற்கு இதன் மிகுதி ஆதனம். இவ் வெல்லைக்குள்ளடங்கிய காணியும் பயிர்களும் அதைச்சேர்ந்தவைகள் அனைத்துமடங்கலும்.

02). வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி பிரதேச செயலகம் சாவகச்சேரி நகரசபை கிராம அலுவலர் பிரிவு மீசாலை மேற்கு பிரிவு J/319 மீசாலை இறை "கிணற்றடி வளவு" நிலப்பரப்பு 2 இரண்டும் குளி 00.49 சைபர் தசம் நான்கு ஒன்பதும் (இதன் பதிவு: F1030/07) இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் 23.08.2020 ஆம் திகதி 7988/s இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டுள்ளது. நிலம். செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குரியவைகளும் இதற்கெல்லை கிழக்கு கார்த்திகேசு நடராசலிங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு இக்கொள்வனவுகாரனுக்கும் முருகேசு புண்ணியமுர்த்தி பெண் யோகாம்பிகைக்குமுரிய ஆதனம். தெற்கு கணேஸ் மகள் சத்யாவுக்கும் நடராசா குலசேகரத்திற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு சின்னையா நல்லையாவுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

இவ்விரு ஆதனங்கள் சேர்ந்து தற்போது பிரசித்த நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் அளந்து வரைப்பட்ட 2024.08.27ஆம் திகதிய 9434ம் இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 9 குளி 12.18 ஆகும்.

தற்போது முருகேசு புண்ணியமூர்த்தி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

(2620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# ஜி-7 கூட்டத்தில் ஜெய்சங்கர் பங்கேற்பு




(வத்திக்கான்)

இத்தாலி நாட்டில் ஜி-7 வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டம் நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக, மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் அந்நாட்டுக்கு சென்றுள்ளார்

அதன்படி ஜி-7 வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டத்தின் ஒரு பகுதியாக அமெரிக்கா, இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்பு, பசுமை எரிசக்தி, உரம், ரெயில்வே மற்றும் முதலீடுகள் ஆகியவற்றில் உள்ள வாய்ப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டதுடன் இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய பொருளாதார வழித்தடம், உக்ரைன் மற்றும் இந்தோ-பசுபிக் உள்ளிட்ட விவகாரங்களை பற்றிய இரு நாடுகளின் பார்வைகள் பரிமாறி கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இஸ்ரேல் –

# போர் நிறுத்த

(ஜெருசலேம்)

**இஸ்ரேல்-ஹிஸ்புல்லா இடையிலுள்ள போர்நிறுத்தத்தி சம்மதம் தெரிவித்துள்ளது.**



ஹிஸ்புல்லா அமைப்பினரை குறிவைத்து லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டு காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதற்கு எதிராக லெபனானில் இயங்கி வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனால் இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறினர்.

அவர்களை மீண்டும் அவர்களுடைய இடத்தில் குடியமர்த்துவது தான்

# ஒப்பந்த மீறலில் ஈடுபட்டால் தாக்குவோம் – நெதன்யாகு எச்சரிக்கை



(ஜெருசலேம்)

ஹிஸ்புல்லா அமைப்பு ஒப்பந்த மீறலில் ஈடுபட்டாலோ ஆயுதங்களை கையிலெடுக்க முற்பட்டாலோ நாங்கள் தாக்கு வோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச் சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ தகவலை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டு உள்ளார்.

எனினும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு இடையே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கையும் விடுத்து உள்ளார்.

அதன்படி அமெரிக்காவின் முழு புரிதலோடு, நாங்கள் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கான முழுச் சுதந்திரம் பெற்றிருக்கிறோம்.

ஒப்பந்த மீறலில் ஹிஸ்புல்லா ஈடுபட்டால் ஆயுதங்களை கையிலெடுக்க அவர்கள் முற்பட்டால், நாங்கள் தாக்குவோம் என தெரிவித்துள்ளார். (நி-8)

# போர் நிறுத்த

# லெபனான் தி



(பெய்ரூட்)

இஸ்ரேலிற்கும் ஹிஸ்புல்லா அமைப்பிற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்ததை தொடர்ந்து ஆயிரக்கணக்கான லெபனான் மக்கள் தென் லெபனானில் உள்ள தங்கள் பகுதிகளிற்கு திரும்பிய வண்ணமுள்ளனர்.

நாங்கள் தென் லெபனானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான்

# தம் ஆரம்பம்!

ுத்தத்திற்கு இஸ்ரேல்



காசா மீது
ாக்குதல்
எதிராக
இயங்கி
ரவு பெற்ற
மைப்பினர்
ாக்குதல்

ஸ்ரேலின்
ல் உள்ள
ன மக்கள்
் இருந்து

மீண்டும்
இடத்தில்
தான்

நோக்கம் என இஸ்ரேல் அறிவித்து கடந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து லெபனான் மீது தாக்குதல் நடத்தியது. தரைவழி தாக்குதலையும் தொடங்கியது.

இதனால் இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையிலான சண்டை அதிகமானது. அடிக்கடி இஸ்ரேல் தாக்குவதும் ஹிஸ்புல்லா பதில் தாக்குதல் நடத்துவதுமாக இருந்தது.

இந்த நிலையில்தான் இஸ்ரேல் - லெபனான் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஐ.நா.என்பன முயற்சி மேற்கொண்டன.

இதற்கு தற்போது வெற்றி கிடைத்துள்ளது. இஸ்ரேல் அரசின் கீழ் இயங்கி வரும் அதிக அதிகாரம் படைத்த பாதுகாப்பு கேபினட் போர் நிறுத்த ஒப்பந்தத் திற்கு சம்மதம் தெரிவித் துள்ளது.

இதன்மூலம் நேற்று நள்ளிரவு முதல் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (நி-8)

## எரிமலை வெடிப்பு

# ஹல்மஹேரா தீவு அருகே விமானங்கள் பறக்க தடை



மலுகு மாகாணம் ஹல்மஹேரா தீவில் உள்ள டுகோனோ எரிமலை வெடித்து சிதறியது.

சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

இந்தோனேசியா பசுபிக் நெருப்பு வளைய பகுதியில் அமைந்துள்ளதால் அங்கு செயல்படும் பல எரிமலைகள் காணப்படுகின்றன.

அவை அவ்வப்போது வெடித்து சிதறி ஆபத்தை ஏற்படுத்துகிறது.

அந்தவகையில் மலுகு மாகாணம் ஹல்ம்ஹேரா தீவில் உள்ள டுகோனோ எரிமலை வெடித்து சிதறியது.

இதில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் உயரத்துக்கு தீக்குழம்புகள் வெளியேறியன.

எனவே அந்த பகுதி முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சி அளிக்கிறது.

இதனையடுத்து ஹல்மஹேரா தீவு அருகே விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

மேலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். (நி-8)

# த்தைத் தொடர்ந்து

# திரும்பும் மக்கள்



ன
ன்
ள்
ண

ன

நோக்கி சென்றுகொண்டிருக்கின்றோம் இந்த பகுதியில் ஹிஸ்புல்லாவிற்கு பெரும் ஆதரவுள்ளது.

வீடு திரும்பும் மக்களால் லெபனான் தலைநகர் பெய்ரூட்டிற்கும் தென் லெபனானிற்கும் இடையிலான முக்கிய வீதிகளில் பெரும் போக்கு வரத்து நெரிசல் காணப்படுகின்றது.

பொதுமக்கள் பொருட்களுடன் கார்களில் செல்வதை அவதானிக்க முடிகின்றது என தெரிவித்துள்ள சர்வதேச செய்தியாளர் கார்கள் வாகனங்களில் இருந்து ஹிஸ்புல்லா கொடிகளை பொதுமக்கள் அசைப்பதை காண முடிகின்றது என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பொது மக்களை உடனடியாக அவர்களின் பகுதிகளிற்கு செல்ல வேண்டாம் என இஸ்ரேலிய லெபனான் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர். (நி-8)



## ஜப்பானில் சக்திவாய்ந்த

# நிலநடுக்கம்



(டோக்கியோ)

ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவில் 6.4 ஆக இந்த நிலநடுக்கம் பதிவானது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

சில இடங்களில் வீடுகளை விட்டு வெளியே வந்து வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

ஜப்பானின் மேற்கு கடலோர பகுதிகளில் இந்த நிலநடுக்கம் பதிவானது. நிலநடுக்கத்தை தொடர்ந்து தற்போது வரை சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.

கடந்த ஜனவரி மாதம் இந்த பிராந்தியத்தில் மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு இருந்தது.

அந்த பாதிப்பில் இருந்தே இன்னும் முழுமையாக மீளாத நிலையில் தற்போது மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட உழவு இயந்திரம்

- ஆறு மாணவர்கள் மாயம்
- இருவர் சடலமாக மீட்பு



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித் துள்ள வெள்ளம் காரணமாக மாவடிப் பள்ளியில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடிபட்டு சென்ற சம்பவத்தில் அதில் பயணித்ததில் காணாமல் போன மாணவர் இரு மாணவர்களின் சடலங்கள் கண் டெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித் துள்ள வெள்ளம் காரணமாக மாவடிப் பள்ளியில் உழவு இயந்திரம் வெள்ளத் தில் அடிபட்டு சென்ற சம்பவத்தில் அதில் பயணித்த 11 மத்ரஸா மாணவர்களில் ஐந்து மாணவர்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தனர் ஏனைய ஆறு மாணவர்களையும் தேடும் பணிகள் நேற்று புதன்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்கின்ற நிலையில் மாணவர்கள் இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

# கொழும்பின் பல பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

களனி ஆற்றின் நீர் மட்ட அதிகரிப்பினால், கொழும்பு உட்பட பல பகுதிகளில் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

குறித்த பகுதிகளில் அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு சிறிய வெள்ள அபாய எச்சரிக்கை அமுலில் இருக்கும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீதாவக, தொம்பே, ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவை, கொழும்பு மற்றும் வத்தளை பிரதேச செயலகப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இதனால் குடியிருப்பாளர்கள் மற்றும் வாகன சாரதிகள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 190 |
| பச்சைமிளகாய் | 600 | 200 | 400-450 |
| தக்காளி | 350 | 350 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 100-150 |
| கோவா | 220 | 200 | 250 |
| கரட் | 260 | 200 | 150 |
| பூசணி | 120 | 100 | 100 |
| புடோல் | 200 | 100 | 150 |
| வாழைக்காய் | 80 | 120 | 60-70 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 150-400 |
| பெரிய வெங்காயம் | 360 | 350 | -- |
| பாகற்காய் | 900 | 800 | 600 |
| வெண்டக்காய் | 120 | 200 | 80-100 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 130 |
| பயற்றங்காய் | 450 | 400 | 300-350 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 |
| பீற்றூட் | 200 | 180 | 150 |
| கறிமிளகாய் | 500 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | -- |
| போஞ்சி | 550 | 600 | 400-600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 160 | 100 | 60-80 |
| தேசிக்காய் | 500 | 400 | 400-550 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 150 | 80-130 |
| இராசவள்ளி | 900 | 1200 | 650 |
| வெங்காயப்பூ | -- | 500 | -- |
| முள்ளங்கி | 140 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 100 |
| வல்லாரை | 30 | 80 | 100 |
| ஈரப்பலா | 200 | 150 | -- |

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபை-பளை

## பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 28.11.2024 தொடக்கம் 11.12.2024 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 12.12.2024 பிற்பகல் 2 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 12.12.2024 பிற்பகல் 2 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| கீழ்தரை | | | | |
| 1. | PMS-01 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 2. | PMS-02 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 3. | PMS-03 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 4. | PMS-04 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 5. | PMS-05 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 6. | PMS-06 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| மேற்தரை | | | | |
| 7. | PMS-07 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 8. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 9. | PMS-09 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 10. | PMS-10 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 11. | PMS-11 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 12. | PMS-12 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 12.12.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்தகாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி.த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

28.11.2024.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலத்தினை குறுக்கறுத்துப் பாயும் வெள்ளம்

## பயணிகள் அவதானம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் ஆங்காங்கே வெள்ள நீர் பாலத்தினை மேவிய நிலையில் இருப்பதனால் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியம் அதிகமாக உள்ளது.

முல்லைத்தீவு பரந்தன் ஏ35 வீதியில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் தொடர்ச்சியான மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கி பாலம் வெளியே தெரியாதபடி இருந்த காரணத்தினால் வட்டுவாகல், சாலை முகத்துவாரங்கள் வெட்டிவிடப்பட்ட நிலையில் நீர் வடிந்திருந்தது.

மீண்டும் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக மீண்டும்வட்டுவாகல்பாலம் ஆங்காங்கே நீரினால் பாலத்தினை குறுக்கறுத்து பாய்ந்த வண்ணம் இருக்கின்றது.

இதனால் குறித்த பாலம் ஊடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் அவதானமாக பயணத்தை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-8-290)

# மகாகச்சகொடி குளத்தில் தவறி விழுந்த இளைஞன் மாயம்

(குருமன்காடு)

வவுனியா- மகாகச்சகொடி குளத்தில் தவறி விழுந்த இளைஞனை காணவில்லை என மாமடுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தனது நண்பன் ஒருவருடன் மகாகச்சகொடி குளத்திற்கு நீராட சென்ற போது கால் தவறி குளத்திற்குள் குறித்த இளைஞன் விழுந்துள்ளார்.

இதனையடுத்து ஊர் மக்கள் குறித்த இளைஞனை தேடியதுடன் மாமடு பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

எனினும் இளைஞன் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மகாகச்சகொடி பகுதியைச் சேர்ந்த 21 வயதான சிரந்த ஹசன் குணவர்த்தன என்ற இளைஞரே காணாமல் போனவர் ஆவார். குறித்த இளைஞனை தேடும் பணி தொடர்வதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-8-250)

# கிளிநொச்சி மாவட்டத்தின் இயல்புநிலை பாதிப்பு



(குருமபுரம்)

சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 1,272 குடும்பங்களைச்சேர்ந்த 4,287 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் இடைத் தங்கள் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை வட்டக்கச்சி ஊடாக கண்டாவளை செல்லும் பிரதான வீதியில் புளியம்போக்கனை பகுதியில் வீதி குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதன் காரணமாக பெரியகுளம் வட்டக்கச்சி செல்லும் வீதி முற்றாக தடைபட்டுள்ளது. (6-8-316)

# முத்தையன்கட்டுக்குள வான்கதவுகள் திறப்பு



(நெளுக்குளம்)

முத்தையன்கட்டு குளத்தில் நீர்மட்டம் உயர்ந்து வருவது மற்றும் நீரின் வரத்து அதிகரித்ததன் காரணமாக, அதிக நீரை வெளியேற்ற நேற்று முன்தினம் வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு குளமானது 24 அடி வரை நீரை சேமிக்கக் கூடியதாக இருக்கின்ற நிலையில் தற்போது 17" அடி 6" அங்குலம் வான் கதவுகள் வரை நீர் மட்டம் உயர்ந்த நிலையிலே குளத்தின் 2 கதவுகள் 6 இஞ்சி திறக்கப்பட்டுள்ளன.

எனவே குறித்த குளத்தின் கீழ் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் விவசாயிகள் தாழ்வான பகுதிகளுக்கும் ஆற்றங்கரைகளுக்கும் செல்ல வேண்டாம் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது. (6-8-299)

# வெள்ளப்பெருக்கால் போக்குவரத்து பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா, நொச்சிமோட்டைப் பகுதியில் வெள்ள நீர் வீதியை மேவிப் பாய்வதால் ஏ9 ஊடான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

பரங்கி ஆறு ஆற்றுப்படுகை மாமடுக்குளத்தில் ஆரம்பித்து, நொச்சிமோட்டை பாலம் வழியாக பேராறு பாய்ந்து செல்வதால் குறித்த வீதியில் வெள்ளம் மேவி பாய்ந்து வருகின்றது.

குறித்த பகுதியில் சிறிய ரக வாகனங்கள் பல பயணிக்க முடியாத நிலையில் இருந்து நீண்ட வரிசையில் தரித்து நிற்பதன் காரணமாக கனரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏ9 வீதியூடாக யாழிற்குப் பயணிக்கும் வாகனங்கள் ஹெப்பத்தி கொல்லாவ, வெலியோயா, முல்லைத்தீவு, பரந்தன் வழி அல்லது மதவாச்சி, செட்டிகுளம், மன்னார் வழி மாற்றுப்பாதைகளை பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (6-8-250)

# முல்லை மாவட்டத்தில் கடல்கள் கொந்தளிப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடல்கள் என்றுமில்லாதவாறு கொந்தளிப்பு நிலைமையுடன் காணப்படுகின்றது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

இந்நிலையில் கிழக்கில் இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது புயலாக மாறி வடக்கை நோக்கி நகர்ந்து வருகின்றது .

இந்நிலையில் மாவட்டத்தில் உள்ள பொக்கணை, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு கடல்கள் என்றுமில்லாதவாறு கடும் சீற்றத்துடன் கொந்தளிப்பான நிலையில் இருக்கின்றது.

கடற்கரை பகுதிகளில் உள்ள மீனவர்கள் தொழிலுக்கு செல்லாது பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# வைத்தியசாலை ஊழியர்கள் மன்னாரில் போராட்டம்




(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், ஊழியர்கள், சுகாதார பணியாளர்கள் இணைந்து நேற்று மதியம் 1 மணியளவில் கொட்டும் மழையிலும் அனைவரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அண்மையில் உயிரிழந்த தாய் மற்றும் சிசுவின் மரணம் தொடர்பில் மக்கள் வைத்தியசாலை செயற்பாடு தொடர்பில் அதிருப்தி அடைந்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கையின் போது தாங்கள் குறித்த சம்பவத்தின் போது இடம்பெற்ற முரண்பாடுகளான செயற்பாட்டினால் அப்போதும் இப்போதும் மௌனிகளாக்கப்பட்டுள்ளோம் என்பதை மக்களுக்கு தெரிவிக்கும் முகமாக அனைவரும் கறுப்புத் துணியினால் வாய்களை கட்டி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (6-8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 642





இன்றைக்கோ குளிர்ந்த வாடைக் காற்றில் இலைகள் அசைந்த மாமரச் சத்தமும், மடைகளில் தண்ணீர் பாய்ந்த சலசலப்பு ஓசையும், மழையை எதிர்பார்த்த மண்டூகங்களின் சுருதி பேதக் குரல்களும், பல வகைச் சில்வண்டுகளின் ஸ்வர பேத ரீங்காரங்களும் சேர்ந்து இயற்கை மாதரசியின் சோக சங்கீத கோஷ்டிகானத்தைப் போல் ஒலித்துக் கொண்டிருந்தன.

வந்தியத்தேவனுடைய உள்ளத்திலும் அப்போது ஏதோ ஒரு வகையான இனந்தெரியாத சோகம் குடிகொண்டிருந்தது. இதன் காரணம் என்னவென்று யோசித்து யோசித்துப் பார்த்தும் புலப்படவில்லை. உண்மையில் அவன் அபரிமிதமான உற்சாகம் கொள்வதற்கு வேண்டிய காரணங்கள் இருந்தன. இந்த வழியாக இரண்டு மாதங்களுக்கு முன்னால் போனபோது என்னென்ன மனோராஜ்யங்கள் செய்தானோ அவ்வளவும் நிறைவேறி விட்டன. அவன் கனவிலும் நடக்கும் என்று கருதாத காரியங்களும் நடந்தேறிவிட்டன. சுந்தர சோழ சக்கரவர்த்தியைத் தரிசித்தாகி விட்டது! தஞ்சாவூர், பழையாறை, மாதோட்டம், அநுராதபுரம் முதலிய மாபெரும் நகரங்களைப் பார்த்தாகி விட்டது.

சோழநாட்டின் கண்ணுக்குக் கண்ணாக விளங்கிய பொன்னியின் செல்வனுடைய சிநேகிதம் கிடைத்து விட்டது. அந்த வீர இளவரசனுக்கு உதவி புரியும் பேறும் கிடைத்து விட்டது. தமிழகத்தின் அழகுத் தெய்வமும், சோழர் குலவிளக்குமான அர சிளங் குமரி குந்தவையை ஒரு முறை பார்ப்பதற்கே எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டும்.

இப்படியிருக்க அவளுடைய தூய இதயத்தின் நேயத்தைப் பெறுவதென்பது எத்தகைய பெறற்கரும் பாக்கியம்? அதை எண்ணியபோது அவன் உள்ளம் பெருமிதத்தினால் பொங்கியது. ஆனால் அந்தப் பெருமிதக் குதூகலத்துடனே ஏதோ ஒரு வேதனையும் தொடர்ந்து வந்தது. அவ்வளவு பெரிய பாக்கியத்துக்கு நான் உண்மையில் உரியவன்தானா? அது நிலைத்து நிற்குமா? கைக்கு எட்டியது வாய்க்கெட்டுவதற்குள் எவ்வளவோ தடங்கல்கள் ஏற்படக்கூடுமல்லவா?

ஆகா! தடங்கல்களுக்கும் என்ன குறைவு? உலகமே தடங்கல் மயம்தான்! ரவிதாஸனைப் போன்ற மாய மந்திரவாதிகளும் நந்தினியைப் போன்ற மாய மோகினிகளும் பழுவேட்டரையர்களைப் போன்ற சதிகாரர்களும் கந்தமாறனையும் பார்த்திபேந்திரனையும் போன்ற சிநேகத் துரோகிகளும், பூங்குழலியையும், வானதியையும் போன்ற பித்துக்கொள்ளிப் பெண்களும், வீரவைஷ்ணவ ஒற்றர்களும், காலாமுக சைவர்களும், கொள்ளிவாய்ப் பேய்களும், ஆழந்தெரியாத புதைசேற்றுக் குழிகளும் நிறைந்த உலகமல்லவா இது.

கடவுளே மேற்கூறிய அபாயம் ஒவ்வொன்றிலிருந்தும் எப்படியோ இதுவரை தப்பித்து விட்டேன்! அவை எல்லாவற்றையும் விடப் பெரும் அபாயகரமான காரியத்தில் இப்போது முதன் மந்திரி அநிருத்தர் என்னை ஏவியிருக்கிறார்! ஒரு பக்கத்தில். எளிதில் மூர்க்காவேசம் கொள்ளக் கூடிய ஆதித்த கரிகாலர் மற்றொரு பக்கத்தில் பெரிய பழுவேட்டரையரைப் பொம்மையைப் போல் ஆட்டி வைக் கும் மாயசக்தி வாய்ந்த மோகினி! இவர்களுடைய நோக் கத்துக்கு குறுக்கே நின்று நான் தடை செய்து வெற்றி பெற வேண்டுமாம்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

ஒரு அடர்ந்த காட்டிலே சிங்கம், யானை, கரடி, சிறுத்தை, மான், காட்டெருமை, நரி, ஓநாய், முயல் போன்றவற்றுடன் இன்னும் சில விலங்குகளும் வசித்து வந்தன.

காட்டுக்கு ராஜாவான சிங்கம் நல்ல முறையில் ஆட்சி செய்து விலங்குகளுக்கு இடையிலே எந்த விரோதமும் உண்டாகாதபடி பார்த்துக் கொண்டது.

எல்லா விலங்குகளும் ஒருவருக்கொருவர் அன்புடனும் உதவி செய்தும் வசித்து வந்தன.

சிங்கராஜாவும் எந்த விலங்கையும் வேட்டையாடாமல் விபத்தினாலும் வயது முதிர்ந்ததாலும் இறக்கும் விலங்குகளையே சாப்பிட்டு வந்தது.

காட்டில் இருந்த நரி மட்டும் எப்போதும் வஞ்சகமாகவே நடந்து கொண்டது. சிங்கராஜாவுக்கு வேண்டிய உதவிகளைத் தேடிப் போய் செய்து வந்தது.

அதனால் தன்னை சிங்கத்துக்கு மிகவும் நெருக்கமான விலங்காகக் காட்டிக் கொண்டது. மான், முயல் போன்ற மற்ற விலங்குகள் சிங்கத்தை நெருங்க முடியாதபடி பல தந்திரங்களைச் செய்தது.

சிங்கத்துக்கு அடுத்தபடியாக அதி காரம் தனக்கே இருப்பதாகக் கூறி சிறிய விலங்குகளை வேலை வாங்கியது.

தனக்கு உணவுக்காக தினந்தோறும் குளத்திலிருந்து நண்டுகளை பிடித்துவர வேண்டும் என முயல்களுக்கு கட்டளை இட்டது.

அதில் துணிவுள்ள ஒரு முயல் "அப்படியெல்லாம் செய்ய முடியாது" என்று கூறி விட்டது.

கடும் கோபம் கொண்ட நரி சிங்கத்திடம் போய் காட்டின் சட்ட திட்டங்களுக்கு முயல் கட்டுப்பட மாட்டேன் என்கிறது. சிங்க ராஜாவான உங்களின் ஆணைக்கு இணங்க மறுக்கிறது.

நீங்கள் நடவடிக்கை எடுக்கா விட்டால் மற்ற விலங்குகளும் சட்டத்தை மதிக்காமல் போய் விடும்" என்று பழி கூறியது.

இதைக் கேட்ட சிங்கத்துக்கு கோபம் தலைக் கேறவே " அந்த முயலை இழுத்து வா என்று கட்டளையிட்டது.

நரி வேகமாக ஓடி அந்த முயலை சிங்கத்திடம் அழைத்து வந்தது. முயலிடம் சிங்கம்,

"நரி சொல்வதைக் கேள் சட்டத்தை மீறினால் தண்டனை நிச்சயம்" என்று கண்டிப்பாகக் கூறி விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் மாறினாலும்.. காட்சிகள் மாறினாலும்.. தான் கொண்ட இலட்சியத்தை மட்டும் மாற்றக்கூடாது. – இராதேயன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சை ஆணையாளரின் முடிவை நாமும் கற்றுக் கொள்ள வேண்டும்

தீர்மானம் எடுத்தல் என்பதிலேயே அனைத்து வெற்றியும் தங்கியுள்ளது.

ஆம், தீர்மானம் என்பதைச் சரியாக எடுத்தல், உரிய நேரத்தில் எடுத்தல், அதை உரியவாறு எடுத்தல் என்பது இங்கு மிகவும் முக்கியமானது.

அந்தவகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கடும் மழையாலும் பெரு வெள்ளத்தாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் இல் இடங்களை விட்டு வெளியேறி பாடசாலைகளிலும் நலனோன்பு நிலையங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் க.பொ.த உயர்தரப் பரீட்சையை 27, 28, 29 ஆகிய மூன்று தினங்களும் ஒத்திவைப்பதாகப் பரீட்சை ஆணையாளர் அமித் ஜெயசுந்தர அறிவித்துள்ளார்.

இங்குதான் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஒருபடி உயர்ந்து நிற்கிறது.

ஆம், கடந்த 25ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகியிருந்தது.

25, 26 ஆகிய இரண்டு தினங்கள் பரீட்சை நடைபெற்ற நிலையில், காற்றழுத்தத் தாழமுக்கத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கனத்த மழை பெய்யும் வாய்ப்பு உண்டென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருந்தது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்போடு நாடுபூராகவும் மூன்று நாட்கள் உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்தார்.

அந்த அறிவிப்பு 26ஆம் திகதி தெரியப்படுத்தப்பட்டது.

உண்மையில், பரீட்சை ஆணையாளரின் இந்த அறிவிப்பு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவின் ஒருங்கிணைந்த தீர்மானம் என்பது இங்கு நோக்குதற்குரியது.

உண்மையில் கடந்த கால ஆட்சியாளர்களின் நிர்வாகம் தற்போதும் இருந்திருக்குமாயின், தென்பகுதியின் நிலைமை பற்றிச் சிந்திக்கப்படுமேயன்றி, வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலை பற்றி இம்மியும் கருத்திலெடுக்கப்படமாட்டாது.

ஆனால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் வடக்கு கிழக்கு என்ற பேதமின்றி இயற்கை அனர்த்தம் ஏற்படுகின்ற ஏதுக்கள் இருப்பதால், உயர்தரப் பரீட்சையை மூன்று நாட்களுக்கு பிற்போடுவதென எடுத்த தீர்மானம் எம்மாணவர்களுக்கு மிகுந்த உதவியாக அமைந்தது.

ஆம், வடக்கு – கிழக்கு எங்கும் பெரு வெள்ளம். வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததால், மாணவர்கள் கற்க முடியாத பரிதாப நிலை.

அதிலும் வான்பாய்கின்ற குளங்கள். வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் வீதிகள். இந்த நேரத்தில் உயர்தரப் பரீட்சையை மூன்று நாட்களுக்கு ஒத்திவைப்பதென்ற தீர்மானம் களநிலை அறிந்து உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட உன்னதமான தீர்மானமாகும்.

இத்தகைய தீர்மானங்களை நம் அரசியல்வாதிகளும் அரச நிர்வாகிகளும் உன்னிப்பாகக் கவனித்து அதுபோன்ற தீர்மானங்களை எடுக்கின்ற அளவில் எங்களை நாங்கள் புடம்போட வேண்டும்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர பணிப்பு

(கொழும்பு)

தொழில்நுட்பத் தகவல்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செயற்படாமல் அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ள பிரதேசங்களுக்குச் சென்று தகவல்களைப் பெற்று, மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்காக கீழ் மட்டத்திலிருந்து வலுவான பொறிமுறையொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் அரச அதிகாரிகளுடன் நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் கூறியுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது,

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைத்து தேவையான உணவு மற்றும் மலசலகூட வசதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அந்த மக்களுக்கு உதவி வழங்கத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையேற்படின், உயர்தர பரீட்சையை மேலும் பிற்போட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தற்போது மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றிருக்கும் மீனவர்கள் தொடர்பில் தேடியறிந்து அவர்களைப் பாதுகாப்பாகக் கரை சேர்ப்பதற்கு அவசியமான வசதிகளை வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தரமான சேவைகளை வழங்கி, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார்.

சீரற்ற காலநிலை காரணமாக அதிக ஆபத்துள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ம-7)

## நாட்டில் நிலவும் மழை காரணமாக பல ரயில் சேவைகள் இரத்து

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக ரயில் போக்குவரத்து தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மார்க்கத்தினூடான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிக்கவிருந்த உதயதேவி ரயில் சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மண்மேடு சரிந்து வீழ்ந்ததால் மலையக மார்க்கத்தினூடான ரயில் போக்குவரத்து நானுஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிச் செல்லவிருந்த இரவு அஞ்சல் ரயில் சேவையையும் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணிக்கவிருந்த அஞ்சல் ரயில் சேவையையும் இரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## வெள்ள அனர்த்தம் தொடர்பில் யாழில் அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பான கலந்துரையாடலானது பாராளுமன்ற உறுப்பினரும், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நேற்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், வெள்ளப் பாதிப்புக்கு உட்பட்டுள்ள பகுதிகளை தாம் நேரில் சென்று பார்வையிட்டதாகவும், எதிர்வரும் காலங்களில் மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டமிட்டு கணிசமான மாற்றங்களை மேற்கொள்ள அனைவரதும் ஒத்துழைப்பினை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், இன்றைய நிலையில் மாவட்டத்தை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்க அனைவரதும் ஒருங்கிணைந்து செயற்பட ஒத்துழைப்பினை நல்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா, தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பாகவும் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. (ம-7,33)

## நீர்ப்பாசன அமைச்சின் அதிகாரிகளின் விடுமுறை இரத்து

நிலவும் கடும் மழையுடனான வானிலை காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என விவசாய, கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதன்படி, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தமது பணியிடங்களில் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது விடுமுறை கோரியுள்ள அதிகாரிகளின் விடுமுறை இரத்துச் செய்யப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### வடமாகாண மரநடுகை மாதம்

### கார்த்திகை 01 - 30, 2024

"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சி விடக்கூடாது."

தமிழ்க் கவிஞர் அறிவுமதி

## கொத்மலை நீர்த்தேக்கத்தின் 3 வான் கதவுகள் திறப்பு

(கொழும்பு)

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது, இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் 3 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வரை இரு வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் நேற்று அதிகாலை மேலும் ஒரு வான்கதவு திறக்கப்பட்டது.

இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாகக் காட்சியளிக்கின்றது.

அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்தோடு, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்பட்டது.

அந்த வகையில் விமல சுரேந்திர நீர்தேக்கத்தின் அணைக்கட்டிற்கு மேலாக நீர் வெளியாகுவதோடு, காசல்ரீ நீர்தேக்க பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கும்படி அதிகாரிகளினால்பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் தத்தளிக்கும் மக்கள்



பிறவுண்வீதி



திருமலை





நொச்சிமோட்டை



நொச்சிமோட்டை



விக்ரோறியா வீதி





புதுக்குடியிருப்பு



(படங்கள்:- சிவசாந்தன், தேவானந்தன், வசந்தரூபன், சதீஸ்)



கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாம்பு கடித்ததில்...

வசிக்கும் 20 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் பாம்புக் கடிக்கு உள்ளாகிய நிலையில் நெடுங்கேணி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது மரணமடைந்துள்ளார்.

தற்போது சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தையடுத்து பாம்பு மற்றும் விஷப்பூச்சிகள் நீரில் அகப்பட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகரும் வாய்ப்புள்ளதால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,250)

## நினைவேந்தலு...

படுகிறது.

வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த சண்முகவடிவேல் என்பவரே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந் துள்ளார். உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## சீரற்ற வானிலை...

துள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் 66,947 குடும்பங்களைச் சேர்ந்த 230,743 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது. (ம-7)

## முதல் மாவீரர்...

கம்பர்மலையில் எம் முதல் மாவீரர் சங்கர் அவர்களின் இல்லத்தில் கப்டன் பண்டிதர் அவர்களின் தாயாரால் நேற்றுக் காலை ஈகச் சுடரேற்றி நினைவேந்தல் இடம்பெற்றது. (ம-7,60)

## வெள்ளக்காடானது...

சேர்ந்த ஆயிரத்து 954 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 272 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 287 பேர் பாதிப்படைந்துள்ளனர். 61 பாடசாலைகளில் 377 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 266 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 495 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 644 பேர் பாதிப்படைந்துள்ளனர். 9 இடைத்தங்கல் முகாம்களில் 218 குடும்பங்களைச் சேர்ந்த 686 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 205 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 487 பேர் பாதிப்படைந்துள்ளனர். 43 இடைத்தங்கல் முகாம்களில் ஆயிரத்து 240 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 128 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 457 குடும்பங்களைச் சேர்ந்த 867 பேர் பாதிப்படைந்துள்ளனர். 3 இடைத் தங்கல் முகாம்களில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 202 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய வடக்கில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 30 ஆயிரத்து 914 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 312 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 290 இடைத் தங்கல் முகாம்களில் 2 ஆயிரத்து 384 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 70 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் மாவட்டச் செயலாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர். (ம-7)

## தமிழர்...

தாயகத்திற்காகப் போராடி வீரச் சாவடைந்த உறவுகளை உணர்வெழுச்சியுடன் நினைவுகூரும் வகையில் வடக்குக் கிழக்கில் நேற்று மாவீரர் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகளிலும், மாவீரர் துயிலும் இல்லங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு மாவீரர் அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் மாவீரர்களுக்குச் சுடர் ஏற்றப்பட்டு, கண்ணீரால் உறவினர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

**முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி**

முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் என ஒன்றுகூடி மாவீரர் தினத்தை அனுஷ்டித்திருந்தனர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு தங்களின் இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டுப் பின்னர் பிரதான பொதுச் சுடரை ஒரு மாவீரரின் தாய் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

**அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில்**

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் இடைவிடாத கொட்டும் மழையிலும் மாவீரர்நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றிருந்தது.

மாலை 06.05 மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டு, தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து மாவீரர்களுக்கான பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அத்துடன், சம நேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டதுடன், மாவீரர்களின் உறவுகள் கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் நினைவேந்தலை மேற்கொண்டனர்.

**கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில்**

யாழ்ப்பாணம் - கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில்மாவீரர் தின நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றிருந்தன.

இதன் போது அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகச் சுடரை மூன்று மாவீரர்களின் தந்தையான கந்தசாமி ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் பொதுச்சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

**குடத்தனை வடக்கில்மாவீரர் நினைவேந்தல்**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குக் குடத்தனையிலும் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் முதல் நிகழ்வாக சிவப்பு, மஞ்சள் கொடி ஏற்றப்பட்டது. கொடியினை மாவீரர் றதிகலாவின் தந்தை கனகரத்தினம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொதுச் சுடரினை வீரவேங்கை தொழில் வாயினின்றும் தாயார் இராசசுந்தரம் சின்னக்கிளி ஏற்றிவைத்தார்.

**சாட்டி துயிலும் இல்லத்தில்**

யாழ்.தீவகம் சாட்டி துயிலும் இல்லத்தில்மாலை 06.05 மணிக்கு ஒலி எழுப்பப்பட்டு ஒரு கரும் புலி மாவீரர் உட்பட மூன்று மாவீரர்களின் பெற்றோரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்களால் சுடர்கள் ஏற்றப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நினைவு கற்களுக்கு மலர்மாலை அணியப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

**மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில்**

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வுபூர்வமாக மாவீரர் நினைவு தினம் நேற்று மாலை நினைவு கூரப்பட்டுள்ளது.

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினால் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் யாழ்.பல்கலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிழக்கு மாகாணம், புலம்பெயர் தேசம் என தமிழர்கள் வாழும் பகுதிகளில் மாவீரர் தினம் உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது. (ம-7,30,33,285,299,315)


மஹஜன சம்பத — திகதி 2024.11.27 — சீட்டிழுப்பு இலக்கம் 5668 — Y 3 4 8 7 6 8
அத சம்பத — Y 8 7 6 8 — சீட்டிழுப்பு இலக்கம் 243
National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.11.27 — சீட்டிழுப்பு இலக்கம் 1698 — B 06 07 20 33 B — Double Chance 66093

மெகா பவர் — திகதி 27/11/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2016 — C 02 07 28 60 71 — 008811

லக்கி 7 VIP — திகதி 2024.11.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0494 — B 7 0 4 2 5 7 B

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3910 — சீட்டிழுப்பு திகதி 27.11.2024 — X 03 33 38 60 — X 090462

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.11.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0977 — கன்னி 11 21 27 61 கன்னி — 057069 — 07

சுப்பர் பெல சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 27.11.2024 — வெற்றி வாரம் 376 — Z 2 8 0 8 0 4 — 11327 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,257,388.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2642 — சீட்டிழுப்பு திகதி 2024.11.27 — தினம் புதன்கிழமை — 29 63 66 69 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,753,530.40 — DLB

சனிதா — திகதி 27.11.2024 — வெற்றி வாரம் 4803 — 14 28 37 68 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,541,820.40 — 46638 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4354 — சீட்டிழுப்பு திகதி 27.11.2024 — தினம் புதன்கிழமை — 07 24 57 58 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,906,418.00 — 205061 — DLB

கப்றக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — P 39 03 17 45 49 — 1818 — 27.11.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,541,894.20 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.11.27 — வெற்றி வாரம் 2081 — 06 14 32 63 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,522,543.20 — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2468 — சீட்டிழுப்பு திகதி 2024.11.27 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,383,097.60 — 17 46 66 70 P — 950923 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசகரை கத்தியால் குத்தி கடுமையாக தாக்கிவிட்டு

## பணம், நகை கொள்ளை கைதடியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிப் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் நேற்று காலை சமயக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பூசகரை கத்தியால் குத்தியும்-கடுமையாகத் தாக்கியும் குழுவொன்று பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுக் கொண்டு தப்பித்துள்ளது.

இதன்போது இந்து மதகுருவிடம் இருந்து நாற்பதாயிரம் ரூபாய் பணம்,சங்கிலி மற்றும் தோடு ஆகியன அபகரிக்கப்பட்டுள்ளன.

மூவர் அடங்கிய கொள்ளைக் கும்பல் ஒன்றே இவ்வாறு மதகுருவைத் தாக்கிப் பணம்-நகைகளை கொள்ளையிட்டுக் கொண்டு தப்பித்துள்ளது.

இதில் தலை மற்றும் முகப் பகுதிகளில் படுகாயமடைந்த 55வயதான மதகுரு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன்-பெண் ஒருவரையும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்திருப்பதாக தெரியவருகிறது.(ம-7,30)

# ஓமந்தையில் வெள்ளம் போக்குவரத்து தடை

யாழ்ப்பாணம் செல்லும் A9 பிரதான வீதியின் ஓமந்தை பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, குறித்த வீதியைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மாற்று வீதிகளில் பயணிக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதற்கமைய கெப்பத்திக்கொல்லாவ, வெலிஓயா, முல்லைத்தீவு, பரந்தன், மன்னார் ஊடாக யாழ்ப்பாணம் செல்ல முடியும் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# இரணைமடுக்குளத்தின் 14 வான் கதவுகள் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பலத்த மழையும், காற்றுடனுமான காலநிலையினால் மக்கள் குடியிருப்புக்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

கிளிநொச்சி சிவபுரம் பகுதியில் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

வடக்கின் மிகப்பெரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் 14 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் பெருமளவான வெள்ள நீர் வெளியேறி மக்கள் குடியிருப்புக்கள், விவசாய நிலங்களை நோக்கி கடந்து செல்கின்றது.

அத்துடன் பலரது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக பலர் இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் 1043 குடும்பங்களைச் சேர்ந்த 3524 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வட்டக்கச்சி ஊடாக கண்டாவளை செல்லும் பிரதான வீதியில் புளியம் பொக்கணைப் பகுதியில் வீதி குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதன் காரணமாக பெரியகுளம் வட்டக்கச்சி செல்லும் வீதி முற்றாகத் தடைப்பட்டுள்ளது. (ம-7)

# ஆழ்ந்த தாழமுக்கம் புயலாக வலுவடையும்

## வளி மண்டலவியல் திணைக்களம்

தென்மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த தாழமுக்கம் அடுத்த 6 மணித்தியாலங்களில் புயலாக வலுவடையும் என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் நாட்டின் வடக்கு, வடமத்திய, மத்திய, மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் கேகாலை மாவட்டங்களின் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வும்வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பதுளை, கொழும்பு, கம்பஹா, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில்மண்சரிவு அபாயம்உள்ள பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.(ம)

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 - 09 - 1980

இறப்பு 27 - 11 - 2024

## இராஜேந்திரம் ஜெனகன்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் ஜெனகன் அவர்கள் 27.11.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராஜேந்திரம் - புஸ்வதி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் ஜெனார்த்தனனின் சகோதரனும் கமலநாயகியின் கணவரும் சாகித்தியன், ரக்சன் ஆகியோரின் தந்தையும் துஸ்யந்தினியின் மைத்துனரும் அக்சயன், சஜனா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 29.11.2024 வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

தகவல் :
குடும்பத்தினர்

076 527 1938

(c-1668)

# யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வானது பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவேந்தல் தூபியில் நடைபெற்றது.

மேஜர் விநோதரன் (பாலசுந்தரம் அஜந்தன்)னின் தாயார் பாலசுந்தரம் பொதுச்சுடரை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் ஈகச் சுடர்களை ஏற்றி, மலர் தூவி உணர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தினர்.

இதில் மாவீரர்களின் உறவுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு நினைவேந்தலில் ஈடுபட்டனர். (ம-7)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1666)

உலர் உணவுப் பொருட்கள்
அனர்த்த கால நிவாரணத்திற்காக உலர் உணவுப் பொதிகளை வழங்க விரும்புவோர் எம்மிடம் சிறந்த விலையில் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.
Happy Supermarket
உரும்பிராய்
077 350 4700
(581)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.